# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் அமெரிக்காவிலுள்ள பள்ளிவாயிலில் 20.06.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

இன்று அல்லாஹ்வின் அருளால் அமெரிக்காவின் ஆண்டு மாநாடு எனது இந்த குத்பாவுடன் ஆரம்பமாகிறது. நான் இங்கு வந்து நேரடியாக ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்பது எனது விருப்பமாகவும் இருந்தது. நீங்களும் அவ்வாறு விரும்பி இருந்தீர்கள். உலகின் ஒவ்வொரு நாட்டிலும் நாம் நடத்துகின்ற இந்த ஆண்டு மாநாடுகளின் ஆரம்பம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களால் அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப அமைந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது துஆக்கள் இந்த ஆண்டு மாநாடுகளுடன் இருக்கிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குக்கிராமமாக இருந்த காதியானில் துவக்கி வைத்த முதல் ஆண்டு மாநாட்டில் 75 நபர்கள் மட்டும் கலந்து கொண்டாலும் அவர்கள் முஹம்மதிய மஸீஹின் தர்பிய்யத்தைப் பெற்ற மக்களாக அவர்கள் இருந்ததால் இறைவனுடன் ஒரு சிறந்த தொடர்பு அவர்களிடம் நிலைபெற்றிருந்தது. அவர்கள் தங்கள் ஈமானிலும் நிச்சய உறுதியிலும் வளர்ச்சியைப் பெற்றிருந்தார்கள். அவர்களது ஈமானின் ஒளியும் நிச்சய உறுதியின் ஒளியும் அல்லாஹ்வின் அருளை ஈர்த்தது. அவர்களது முயற்சிகளையும், தியாகங்களையும் ஏற்றுக் கொண்ட இறைவன் அஹ்மதிய்யத்திற்காக அதன் எண்ணற்ற பழங்களை வழங்கினான். அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பேரன்பர்களாக இருந்தார்கள். அந்த பேரன்பர்கள் தனது அன்பிற்குரியவரின் அருகில் ஒன்றுகூடியவாறு அந்த முதல் மாநாட்டை ஒரு பள்ளிவாசலில் வைத்து நடத்தினார்கள். முஹம்மதிய மஸீஹின் காரணமாக அவர்களுக்குக் கிடைத்த அகப்பார்வையின் ஒளியின் மூலமாக இந்த மாநாடு பள்ளிவாசலிலிருந்து வெளியேறி இனி பெரும் மைதானங்களில் பரவப்போகிறது என்ற உறுதியில் அவர்கள் நிலைபெற்று இருந்தார்கள். பிறகு காதியானில் உள்ள மைதானத்தில் மட்டுமல்லாமல் இது உலகின் பெரும்பாலான நாடுகளில் உள்ள மைதானங்களில் பரவப் போகிறது. பிறகு சிறு சிறு மைதானங்களில் மட்டுமல்லாமல் அந்த மாநாடுகளை நடத்துவதற்கு முஹம்மதிய மஸீஹின் ஜமாஅத்திற்கு பல ஏக்கர் கணக்கிலுள்ள மைதானங்கள் தேவைப்படும் என்ற உறுதி அவர்களுக்கு இருந்தது. இன்று நாம் பார்க்கின்றோம். உலகிலுள்ள சில ஜமாஅத்துகள் தங்களது நாட்டில் மாநாடுகளை நடத்துவதற்காக நூற்றுக்கணக்கான ஏக்கர்களில் பரவியுள்ள நிலத்தை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவின் அஹ்மதிய்யா ஜமாஅத் இத்தகைய ஜமாஅத்துகளில் ஒன்றாகும். ஆண்டு மாநாடுகளை நடத்துவதற்காக அவர்கள் 22 ஏக்கர் கொண்ட நிலத்தை வாங்கியுள்ளார்கள். அதில் பள்ளிவாசலும் கட்டப்பட்டுள்ளது. அழகான பள்ளிவாசலை நீங்கள் கட்டியுள்ளீர்கள். சில காலம் வரையில் ஆண்டு மாநாடுகள் இந்த திடலில் நடந்து வந்தது. ஆனால் சில அடிப்படை வசதிகள் இல்லாமல் இருப்பதால் இப்போது வாடகைக்கு இடமெடுத்து நாம் நமது மாநாட்டை நடத்த வேண்டியதுள்ளது. அதனால் நாம் இன்று இங்கு கூடியுள்ளோம். இது வாடகை கொடுத்து நாம் பெற்றுள்ள இடமாகும். நீங்களும் இந்த தேவையை கருத்தில் கொண்டு ஒரு பெரிய நிலத்தை இதற்காக தேடிக்கொண்டு இருக்கின்றீர்கள். அதன் மூலம் உங்களது சொந்த இடத்திலேயே மாநாடுகள் நடத்த நீங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கின்றீர்கள். இவை எல்லாம் சிந்திப்பவர்களின் மனதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இறைவன் செய்த வாக்குறுதி உண்மையானது என்பதை நிரூபித்து விட்டது. இந்த அமெரிக்காவில்தான் ஜமாஅத் தரப்பிலிருந்தும் முதல் முபல்லிக் அனுப்பப்பட்ட போது அவர் சிறையில் அடைக்கப்பட்டார். அவருக்கு தப்லீக் செய்ய அனுமதி வழங்கப்பட வில்லை. ஆனால், இறைவனின் விதிக்கு

முன்னால் எந்த தடையும் நிற்க முடியாது. அல்லாஹ் தடைகளை அகற்றி விட்டான். நீங்கள் இப்போது ஆண்டு மாநாட்டு திடலுக்காக நிலத்தை தேடிக்கொண்டு இருக்கின்றீர்கள். 100 ஏக்கர் கொண்ட நிலம் வாங்க வேண்டும் என்று பேச ஆரம்பித்து விட்டீர்கள். ஆனால் இந்த விஷயத்தை எப்போதும் நீங்கள் கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆண்டு மாநாடுகளின் நோக்கங்களாக கூறியிருப்பது பெரும் பெரும் நிலங்களை வாங்குவதோ அல்லது எண்ணிக்கையை கூட்டுவதோ அல்ல. மேலும் தன்னை ஏற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கையை வெளிப்படுத்திக் காட்டுவதும் அல்ல. மாறாக, தக்வாவில் முன்னேறுபவர்களின் ஜமாஅத்தை உருவாக்குவதே அவர்களின் நோக்கமாக இருந்தது. மேலும் இறைவனை வணங்குபவர்களின் ஜமாஅத்தை உருவாக்குவதே அவர்களின் நோக்கமாக இருந்தது. இறையடியார்களின் உரிமையை நிறைவேற்றக் கூடியவர்களின் ஒரு படையை தயார் செய்வதே அவர்களின் நோக்கமாக இருந்தது. அவர்கள் உலக ஆயுதங்களை துப்பாக்கிக் குண்டுகள், பீரங்கிகள் ஆகியவற்றை ஏந்தியவர்களாக இருக்கக் கூடாது. மாறாக, தங்களது நெற்றியில் அல்லாஹ்வை வணங்குவதனால் ஏற்பட்டுள்ள அடையாளங்கள் வெளிப்படுகின்ற மக்களாக அவர்கள் இருக்க வேண்டும். அவர்களது உள்ளம் இறைவனது படைப்பினங்களின் மீதுள்ள அன்பால் நிறைந்திருக்க வேண்டும். அவர்களது இரவுகள் தக்வாவுடன் கழிய வேண்டும். அவர்களது பகல்கள் இறையச்சத்தால் நடுங்கியவாறு கழிய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஜமாஅத்தில் இணைந்த பிறகு எவ்வித நற்செயலையும் செய்யாமலேயே அவர்களது பாதுகாப்பின் கோட்டைக்குள் நாம் நுழைந்துவிட முடியாது என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். மாறாக நாம் நமது பொறுப்புகளைப் புரிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்திலிருந்து நாம் மிக தொலைவில் செல்ல செல்ல முன்பை விட அதிகமாக இதன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். ஒவ்வொரு தாயும் தந்தையும் தங்களது சந்ததிகளை பாதுகாப்பதற்கு தங்களை சீர்திருத்திக் கொள்வதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். இந்த மேற்கத்திய கலாச்சாரத்தின் இடையே வாழும் நாம் குறிப்பாகவும் இந்த பௌதீகத்தில் மூழ்கியிருப்பவர்கள் மத்தியில் பொதுவாகவும் ஒவ்வொரு இடத்திலும் நீங்கள் உங்களது குழந்தைகளை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்பவர்களாக இருக்கவில்லை யென்றால் நீங்கள் உங்களையும் உங்களது குழந்தைகளையும் இந்த பாதுகாப்பின் கோட்டையிலிருந்தும் வெளியேற்றுபவர்களாக ஆகி விடுவீர்கள். நமது நாவுகள் அல்லாஹ் அல்லாஹ் என்று கூறிக் கொண்டிருக்கும். ஆனால், நமது செயல் நமது கூற்றை பொய்ப்படுத்திக் கொண்டிருக்கும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் ஆண்டு மாநாட்டின் நோக்கத்தை விளக்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்.

இந்த மாநாட்டின் அசல் நோக்கம் என்னவென்றால், நமது ஜமாஅத்தை சார்ந்துள்ள மக்கள் இவ்வாறு மீண்டும் மீண்டும் ஒருவரையொருவர் சந்திப்பதன் மூலமாக அவர்களது உள்ளம் மறுமையின் பக்கம் முற்றிலும் குனிந்து விடும் அளவிலுள்ள ஒரு மாற்றத்தை அவர்கள் ஏற்படுத்த வேண்டும். அவர்களிடம் இறைவனைப் பற்றிய அச்சம் உருவாக வேண்டும். அவர்கள் நேர்மையிலும், தக்வாவிலும் இறை திருப்தியைப் பெறுவது, இறைவன் தடுத்தவற்றிலிருந்து விலகுவது, மென்மையான உள்ளம் கொண்டவராக இருப்பது, ஒருவர் மற்றவர் மீது அன்பு காட்டுவது, சகோதர உணர்வுடன் நடந்து கொள்வது ஆகியவற்றில் ஒருவர் மற்றவருக்கு சிறந்த முன்மாதிரியாகத் திகழ வேண்டும். தாழ்மை, பணிவு குணம், நேர்மை அவர்களிடம் உருவாக வேண்டும். மார்க்கப் பணிகளுக்காக சிறந்த ஈடுபாடு அவர்களிடம் இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இத்தகைய உயர்வான தரத்தை நம்மிடம் உருவாக்க விரும்புகின்றார்கள். நம்மில் பலரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சிறந்த மேற்கோளை

பிறர் கூறக் கேட்டிருப்பார்கள். படித்திருப்பார்கள். ஆனால் உலகப் பணிகள் நம்மை மீண்டும் இந்த விஷயங்களிலிருந்து நம்மை தொலைவில் கொண்டு செல்கிறது. நமது வாழ்வின் நோக்கம் என்ன? என்பதை மறந்து விடுகின்றோம். எவ்வாறிருப்பினும் இது மனிதனின் இயல்பாகும். மனிதன் மறந்து விடுகின்றான். அவனிடம் பலவீனங்கள் உருவாகின்றன. ஷய்த்தான் அல்லாஹ்வின் அடியார்களை சரியான வழியிலிருந்து அகற்றுவதற்காக முழு வீச்சில் செயல்படுவதாக அறிவித்துள்ளான். எனவே, அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை போதித்துக் கொண்டே இருக்கும்படி கட்டளையிட்டுள்ளான். நம்பிக்கையாளர்களுக்கு போதனை பயனளிக்கும் என்றும் அவன் கூறியுள்ளான். அதன் மூலம் தங்கள் பலவீனங்களை அகற்றி ஷய்த்தானிடமிருந்து தப்பிப்பதற்காக புதுப்புது வழிமுறைகள் இவர்களுக்கு கிடைத்துக் கொண்டேயிருக்கும். இந்த பணியை தொடர்ந்து செய்வதற்காகவே இந்த காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அல்லாஹ் அனுப்பியுள்ளான். இதுவே கிலாஃபத்தின் பணியுமாகும். அதன் மூலம் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பவர்கள் உருவாகிக் கொண்டே இருக்க வேண்டும். நான் தற்போது படித்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மேற்கோளில் கூறியுள்ளபடி ஒவ்வொரு அஹ்மதியும் செயல்பட்டால் இந்த உலகம் அவருக்கு சொர்க்கத்திற்கு இணையானதாக ஆகி விடும். நாமும் நமது சந்ததிகளும் நமது படைப்பின் நோக்கத்தைப் புரிந்தவர்களாக ஆகி விடுவோம்.

முதலாவதாக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த மேற்கோளில் தக்வாவைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். தக்வா என்றால் என்ன? **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்** கூறுகின்றார்கள்.

தக்வா என்பது தீமையின் பக்கம் சாயும் ஆன்மாவின் பாத்திரத்தை சுத்தப்படுத்துவதற்குக் கூறப்படும் பெயராகும். இதிலிருக்கும் உணவு நன்மையாகும். அந்த உணவு உறுப்புகளுக்கு ஆற்றலை வழங்கி மனித இனம் நற்செயல்கள் வெளிப்படுவதற்கு தகுதி உள்ளவனாக அவனை ஆக்குகின்றது. அதன் மூலமாக இறை நெருக்கத்தின் உயர்வான தகுதியை அவர்கள் பெற முடியும்.

முதலாவது விஷயம் இறைவனைப் பற்றிய அச்சம் ஒருவரிடம் இருந்தால், அவனது இருப்பின் மீது நம்பிக்கை இருந்தால் தனது உள்ளத்தை தூய்மைப்படுத்துவதின் பக்கம் மனிதனின் கவனம் இருக்கும். அல்லாஹ்வை வணங்குவதன் பக்கம் அவரது கவனம் இருக்கும்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் இந்தக் கருத்தை இவ்வாறு விளக்கிக் கூறுகின்றான்.

**வல்லதீன ஜாஹதூ ஃபீனா லனஹ்தியன்னஹும் சுபுலனா** - எவர்கள் நம்மை சந்திக்க முயற்சி செய்வார்களோ நிச்சயமாக நாம் அவருக்கு நமது வழிகளின் பக்கம் வருவதற்கான நற்பேற்றை வழங்குவோம். (29:70)

எனவே, தக்வாவை உருவாக்குவதற்காகவும், அந்த பாத்திரத்தை சுத்தப்படுத்துவதற்காகவும் முதலாவதாக உழைப்பு தேவைப்படுகிறது. மனிதன் இறைவனைப் பற்றிய அச்சத்தையும், அவன் மீதுள்ள அன்பையும் உள்ளத்தில் வைத்தவாறு அவன் பக்கம் முன்னேறிச் செல்ல முயற்சி செய்தால், பிறகு அல்லாஹ் இந்த பாத்திரம் அதிகமாக தனது பிரகாசத்தை வெளிப்படுத்துவதற்கான வழிகளையும் நமக்கு கற்றுத் தருவான். இன்றைய நாட்களில் பாத்திரங்களை சுத்தப்படுத்துவதற்காக குறிப்பாக பல்வேறு விதமான சோப்புகளும் கெமிக்கல்களும் உள்ளன. அதன்மூலம் பாத்திரம் பளிச்சென்று மின்ன வேண்டும் என்பதற்காகவே நாம் அதை பயன்படுத்துகின்றோம். எல்லா விதமான அழுக்குகளும் நீங்கி அது தூய்மையடைவதற்கு நாம் அவ்வாறு செய்கின்றோம். எந்தப் பிசுக்கும் அதில் இல்லாமல் இருப்பதற்கும் எல்லா

விதமான கிருமிகளும்கூட மரணித்து விட வேண்டும் என்பதற்காக நாம் அவ்வாறு செய்கின்றோம். இன்னும் சொல்வதென்றால் சில உணவுப் பொருட்களின் வாடை அந்தப் பாத்திரத்தில் இருந்தால் கூட அவற்றை அகற்றுவதற்காக நாம் குறிப்பாக முயற்சி செய்கின்றோம். சில வீட்டிலுள்ள பெண்கள் முட்டை அல்லது மீன் சமைக்கப்பட்ட பாத்திரங்களை தனியாக வைத்து அவற்றைக் கழுவுவார்கள். அதற்காக அதிகமாக உழைப்பார்கள். எல்லா பாத்திரங்களையும் ஒன்றாக வைத்து கழுவுவதன் மூலமாக மற்ற பாத்திரங்களில் அதன் வாடை சென்று விடக்கூடாது என்பதற்காக அவ்வாறு செய்கின்றனர். உலகிலுள்ள பாத்திரங்களைக் கழுவுவதற்காக நாம் இந்த அளவு உழைக்கின்றோம். பல்வேறு விதமான சோப்புகளை அதற்காக தேடுகின்றோம். இந்த பாத்திரங்களில் பெரும்பாலும் மனிதனின் வாழ்நாளிலேயே அவனது கண் முன்னாலேயே உடைந்து போய் விடுகிறது. அதனால் எந்த பலனும் ஏற்படாமல் போகின்றது. அவ்வாறு உடையாமல் அவை எஞ்சி இருந்தாலும் மனிதன் மரணிக்கின்ற சமயத்தில் அவை அவனுடன் செல்வதில்லை. இந்தப் பாத்திரங்களுக்காக இவ்வளவு அதிகம் உழைக்க வேண்டியதுள்ளது. ஆனால் மனிதனின் உள்ளத்தின் பாத்திரத்தை இறைவன் தக்வாவின் மூலமாக தூய்மைப்படுத்தும் படி கட்டளையிட்டுள்ளான். அதில் வைக்கப்பட்டுள்ள நன்மைகள் இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளையும் இறைவனது அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அவை இறைவன் முன்னால் எடுத்து வைக்கப்படும். அவை நமது மரணத்திற்குப் பிறகும் நமக்கு பயனளிக்கும். அது மட்டுமல்லாமல் நமது உள்ளத்தின் பாத்திரத்தில் வைக்கப்பட்டுள்ள நன்மைகள் நமது சந்தயினருக்கும் பயனளிக்கக்கூடியவையாக இருக்கும். நமது பாத்திரங்கள் தூய்மையாக இருந்தால், நமக்கு பிறந்துள்ள தூய இயல்புடைய சந்ததிகளும் தங்களது பாத்திரங்களை தூய்மையாக வைத்திருப்பதன் பக்கம் கவனம் செலுத்துவார்கள். மேலும் இறைவனது திருப்தியைப் பெறுவதற்காக அவர்கள் முயற்சி செய்து கொண்டிருப்பார்கள்.

தக்வாவின் மூலம் தூய்மைக்கப்பட்டுள்ள பாத்திரத்தில் வைக்கப்பட்டுள்ள உணவு கெட்டுப் போகக் கூடிய உணவும் அல்ல. நோயை உருவாக்கும் உணவும் அல்ல. மாறாக, இது உடலுக்கு ஆற்றலை வழங்கும் உணவாகும். அது எப்போதும் நிலைத்திருக்கும் ஆற்றலாகவும் இருக்கும். அதன் மூலம் மேலும் நன்மைகள் உருவாகும். மேலும் சிறந்த உணவுகள் அதற்கு கிடைத்துக் கொண்டேயிருக்கும். அல்லாஹ்வின் அருள்களின் கதவுகள் இதன் மூலம் மேலும் திறந்து கொண்டே செல்லும். மனிதன் தீமையின் பக்கம் சாய்கின்ற ஆன்மாவின் பள்ளத்தாக்கில் திக்குத் தெரியாமல் சென்று தவிப்பதற்குப் பதிலாக இறைவனின் வலிமைமிக்க கோட்டையின் அடைக்கலத்தின்கீழ் வந்து விடுவான்.

தக்வாவின் கருத்தை விளக்கியவாறு ஓரிடத்தில் **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்** இவ்வாறு கூறுகின்றார்கள்.

எல்லா கட்டளைகளையும்விட அதிகமாக திருக்குர்ஆனில் தக்வா, இறைவன் தடுத்தவற்றிலிருந்து விலகிக் கொள்வது ஆகியவை தொடர்பாக மிகவும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் தக்வா ஒவ்வொரு தீமையிலிருந்தும் நாம் தப்புவதற்கு நமக்கு ஆற்றலை வழங்குகிறது. ஒவ்வொரு நன்மையின் பக்கம் நாம் ஓடுவதற்கு அது நம்மை இயக்குகின்றது. இந்த அளவு தக்வா தொடர்பாக வலியுறுத்திக் கூறப்படுவதிலுள்ள இரகசியம் என்னவென்றால், தக்வா ஒவ்வொரு கதவின் அருகிலும் மனிதனுக்கு இரட்சிப்பை வழங்கக்கூடியதாக இருக்கின்றது. ஒவ்வொரு குழப்பத்திலிருந்தும் நாம் பாதுகாப்பாக இருப்பதற்குள்ள பாதுகாப்புக் கோட்டையாகவும் அது இருக்கின்றது. இறையச்சமுள்ள மனிதர்கள் அவர்களை தவிர்த்துள்ள மற்ற மக்கள் அழிந்து போவதற்கு காரணமாக இருக்கின்ற பல்வேறு துன்பங்களிலிருந்தும்

சண்டைகளிலிருந்தும் தப்பி விடுவார்கள். மற்றவர்கள் அவற்றில் சிக்கி சில நேரங்களில் அழிந்து விடுவார்கள். அவர்கள் தங்களது அவசரம் காட்டும் தன்மையினாலும், தப்பெண்ணங்களினாலும் சமுதாயத்தில் பிரிவினையை ஏற்படுத்தி விடுவார்கள். அதனால் எதிரிகள் இது தொடர்பாக ஆட்சேபனைகளை செய்வதற்கான சந்தர்ப்பத்தை அவர்கள் தருகின்றார்கள்.

நம்மில் ஒவ்வொருவருக்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இருந்த இந்த வேதனையை உணர வேண்டும். இதனை மேலோட்டமாக பார்த்து விட்டு அல்லது படித்து விட்டு நாம் இருந்து விடக் கூடாது.

இத்துடன் நான் ஜமாஅத்திலுள்ள பெண்களிடம் கூறிக் கொள்வது என்னவென்றால், அவர்கள் மார்க்க விஷயங்களில் முன்னேறிச் செல்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். உங்களது ஆன்மீக நிலையை உயர்த்துங்கள். அதன் மூலம் எந்தவொரு பெண்ணின் மீதும் இவள் மார்க்கமில்லாதவள் என்ற குற்றச்சாட்டு இருக்கக் கூடாது. அவரும் நான் இந்த காரணத்தால் இந்த பெண்ணுடன் வாழ முடியாது என்று கூறக்கூடாது. மார்க்க விஷயங்களில் முன்னேறிச் செல்வதன் மூலம் பெண்களிடம் நன்மையிலும் முன்னேற்றம் ஏற்படும். அல்லாஹ்வுடனும் தொடர்பு நிலை பெற்று விடும். பிறகு இந்த தொடர்பின் காரணமாக அல்லாஹ் அருள் செய்வான். துன்பங்கள் நிறைந்த நிலைமைகளிலிருந்து அவர்களை வெளியேற்றிக் கொண்டு வருவான். நான் கூறியது போன்றே இன்றைய நாட்களில் இது ஒரு முக்கியான பிரச்சனையாக இருக்கின்றது. அமெரிக்காவில் இதுபோன்ற சம்பவங்கள் நடந்துள்ளன. ஆரம்பத்தில் குற்றம் புரிந்தவர் கணவரா அல்லது மனைவியா என்பது எனக்குத் தெரியாது. இரு தரப்பிலும் ஏதாவது குறைகள் இருக்கலாம். ஆனால், நமக்கு தெரிய வரும் விஷயங்களை வைத்து பார்க்கும் போது அதிகபட்சம் கணவரும் அவரது குடும்பத்தைச் சார்ந்தவர்களும்தான் அதிகமாக குற்றமிழைத்திருப்பவர்களாக இருக்கின்றார்கள். சில நேரங்களில் குழந்தைகள் பிறந்த பிறகு கணவரும் மனைவியும் பிரிந்து விடுகின்றார்கள். ஒருவர் மற்றவர் மீது அந்த குழந்தைகளை வைத்து அவரது உணர்வுகளை காயப்படுத்தித் தொல்லைகள் கொடுத்து வருகின்றார்கள். ஆனால், தந்தையையோ அல்லது தாயையோ அவர்களது பிள்ளைகள் மூலமாக துன்புறுத்தக் கூடாது என்பது இறைவனின் தெளிவான கட்டளையாகும். இது மட்டுமல்லாமல் சிலர் அந்த தாயிடமிருந்து பிள்ளைகளைப் பறித்து விடுகின்றார்கள். நான் இது தொடர்பாக ஆய்வு செய்து பார்த்த சமயத்தில் பல வழக்குகளில் அவர்கள் பொய்யான தகவல்களை எனக்கு எழுதி விடுகின்றார்கள். அவர்கள் பொய்யை எழுதி என்னை ஏமாற்றினாலும் இறைவனை அவர்களால் ஏமாற்ற முடியாது. அவன் மறைவானவற்றை அறிந்தவனாக இருக்கின்றான். இவை எல்லாமே தக்வாவிலுள்ள குறைபாட்டின் காரணமாகத்தான் ஏற்படுகின்றது. இதில் பெரும்பாலும் பெற்றோர்களும் குற்றம் புரிந்தவர்களாக இருக்கின்றார்கள். இந்த எண்ணிக்கை இப்போது அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அது எனக்கு கவலையளிக்கக்கூடியதாக இருக்கின்றது. இன்று ஒரு பொறுப்பாளர் என்னிடம் ஜமாஅத்தில் சில இளைஞர்களின் நிலை இதுதான் என்பதை இளம் பெண்களிடம் கூறி விடுங்கள் எனக் கூறினார். அப்படிப்பட்ட பொறுப்பாளர்களிடம் நான் கூறிக் கொள்வது என்னவென்றால் உங்களிடம் தீர்ப்பை எதிர்பார்த்து ஒருவர் பிரச்சனையைக் கொண்டு வருகின்றபோது உங்கள் மூளையை எல்லா விதமான விஷயங்களை விட்டும் காலியாக வைத்து எவர் பக்கமும் சாயாமல் சரியான தீர்ப்பைக் கூறி விடுங்கள். அதே சமயத்தில் எவர் மீதும் எவ்வகையிலும் நீங்கள் அநீதியிழைக்கக் கூடாது. இரண்டாவதாக, எனது பார்வையில் இவ்வாறு கூறுவது நமது அஹ்மதி இளைஞர்கள் மீது தப்பெண்ணம் கொள்வதாகும். அதாவது அந்த இளைஞர்களிடம் சீர்திருத்தமே ஏற்படாது. அல்லது அவர்களை எவரும் சீர்திருத்த முடியாது என்று அவர்கள் கருதுகின்றார்கள். இது இறைவன் மீதே அவர்கள் வைக்கும் தப்பெண்ணமாகவும் இருக்கின்றது. அவர்களை

சீர்திருத்தும் ஆற்றல் இறைவனுக்கே இல்லை என இவர்கள் கருதுகின்றார்கள். பல்வேறு சந்தர்ப்பங்களில் கணவன், மனைவி ஆகியோரிடத்தில் ஏற்பட்ட பல பிரச்சனைகளில் போதனைகள் மூலமாகவும் துஆக்கள் மூலமாகவும் முயற்சி செய்த போது மிகப்பெரும் அளவில் அவர்களிடம் மாற்றம் ஏற்பட்டுள்ளதை என்னால் பார்க்க முடிந்தது. அப்படி இருக்கும்போது உங்களது பிரச்சனைகளுக்கு எவ்வித தீர்வும் இல்லை என்று பெண்களிடம் நான் எப்படி கூற முடியும்? அவர்கள் மீது இழைக்கப்படும் அநீதிகளை அவர்கள் சகித்துக் கொண்டே செல்ல வேண்டும் என்று எப்படி என்னால் கூற முடியும்? அல்லது இளைஞர்கள் தொடர்பாக அவர்கள் தங்களிடம் சீர்திருத்தத்தை ஏற்படுத்தத் தகுதியற்றவர்கள் என்று எப்படி என்னால் அறிவிக்க முடியும்? நான் இங்கு வந்த பிறகு இங்குள்ள இளைஞர்களிடம் கண்ட மனத்தூய்மையை வைத்துப் பார்க்கும் போது அவர்களுக்கு எதிராக கூறுபவர்களின் கூற்றை என்னால் நம்ப முடியவில்லை. கலப்பற்ற மனத்தூயமையால் நிறைந்திருக்கும் இளைஞர்களாக அவர்கள் எனக்கு தென்படுகின்றனர். ஒரு சில இளைஞர்கள் ஜமாஅத்தில் அநீதியிழைக்கக் கூடியவர்களாக இருந்தால் இந்த எனது அறிவிப்பிற்கு பிறகு இளைஞர்களுக்கு முழுமையான சுதந்திரம் கிடைத்து விடும். நீங்களும் தக்வாவை கைவிட்டு விட்டு இப்படிப்பட்ட தீயவர்களை பின்பற்றிச் செல்வதற்கு நான் முழுமையான சுதந்திரம் வழங்கியிருப்பதாக அவர்கள் கருத வேண்டாம். பொறுப்பாளர்களும் தனது தலையிலிருந்து சுமைகளை இறக்கி வைப்பதற்கு மட்டும் முயற்சி செய்ய வேண்டாம். அல்லாஹ் அவர்களிடம் ஒப்படைத்துள்ள தர்பிய்யத்திற்கான பணிகளை அவர்கள் முழுமையாக நிறைவேற்ற வேண்டும். இளைஞர்களிடமும், பெண்களிடமும் நான் கூறிக் கொள்வது உங்களை நீங்களே ஆய்வு செய்து பாருங்கள். எவர் தரப்பிலிருந்து அநீதி இழைக்கப்பட்டிருந்தாலும் அவர் தனது சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்தியவாறு இந்த உலகை அவர்களுக்காக சுவர்க்கமாக மாற்றுகின்ற அந்த அழகிய சமுதாயத்தை உருவாக்க முயற்சி செய்யுங்கள் என்பதாகும். மென்மையான உள்ளம் கொண்டவர்களாக இருப்பது நற்செயல்களைச் செய்வது, இறைவணக்கத்தின் பக்கம் கவனம் செலுத்துவது ஆகிய இவையே தக்வாவின் அடையாளமாக உள்ளன. இவற்றை உங்களிடம் உருவாக்குங்கள். ஒவ்வொரு அஹ்மதியும் இதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டால் உண்மையான பொருளில் ஒரு புரட்சியை நாம் நமது வாழ்நாளில் ஏற்படுத்துவதாக இருப்போம். ஆனால், இதற்காக முயற்சி செய்ய வேண்டியது அவசியமானது என்பதை எப்போதும் நினைவில் வையுங்கள். அல்லாஹ் கூறியுள்ள அந்த அனைத்து நற்செயல்களையும் செய்வது அவசியமாகும். அதன் பட்டியல் மிக நீளமானதாகும். எனவே, இனி எதிர்வருகின்ற இரண்டு நாட்களும் தர்பிய்யத் தொடர்பான விஷயங்கள் பற்றியே நான் உங்களிடம் கூறுவேன்.

அல்லாஹ் மாநாட்டில் கலந்து கொண்டுள்ள அனைவருக்கும் அவர்கள தங்களிடம் தூய்மையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான தவ்ஃபீகை வழங்குவானாக! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த பிறகு ந்த பைஅத்தின் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில அவர்கள் செய்ய வேண்டியவற்றை செய்வதற்கு அல்லாஹ் அவர்களுக்கு உதவி புரிவானாக! அல்லாஹ் எல்லாருக்கும் இதற்கான நற்பாக்கியததை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT AMERICA MOSQUE**
**ON 20.06.2008**

Translated by : **Maulavi M. Rafeeq Ahmad H.A**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**